சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# செய்தி மடல்

வெளியீடு : 04 | மாதம் : தை | ஆண்டு : 2010

கொழும்புத் தமிழ்ச் சங்க இணையத்தளத்தில் **'எம்மைப் பற்றி'** எனும் பகுதியிலுள்ள **"செய்தி மடல்"** என்பதன் பிரசுர வடிவம் இம்மடலாகும். மேலும் விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

இணையத்தளம்:www.colombotamilsangam.com
மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com
info@colombotamilsangam.com
தொலைபேசி இல : 2363759
தொலைநகல்: 2361381

## நடைபெறவிருக்கும் நிகழ்வு
## ஆய்வரங்கு
## முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் "யாழ்நூல்"
## இசை, நடன நூற் கண்காட்சியும், விற்பனையும்

இடம் : கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபம்
காலம் : 21.02.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.45 மணி

**நிகழ்ச்சி நிரல்**

மங்கல விளக்கேற்றல் : திரு.திருமதி முத்துபிள்ளை விஸ்வநாதன் அவர்களும் துணைவியாரும் (அதிபர், சொர்ணம் குரூப் கம்பனி)
தமிழ் வாழ்த்து: சங்கீத கலா வித்தகர் வை.கணேசலிங்கம்
வரவேற்புரை : திரு.மா.கணபதிப்பிள்ளை(கல்விக்குழுச் செயலாளர், கொ.த.சங்கம்)
தொடக்கவுரை : பேராசிரியர் சபா ஜெயராசா (துணைத் தலைவர், கொ.த.சங்கம்)
தலைமையுரை : பேராசிரியர் சோ.சந்திரசேகரம் (தலைவர், கொ.த.சங்கம்)
ஆய்வுரைகள் : **"தமிழியல் நோக்கில் யாழ்நூல்"**
கலாநிதி வ.மகேஸ்வரன்
(முதுநிலை விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்)
**"இயற்பியல் நோக்கில் யாழ்நூல்"**
கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
(முதுநிலை விரிவுரையாளர், பௌதீகவியல் யாழ்.பல்கலைக்கழகம்)

**மதிய போசன இடைவேளை**

**"இசையியல் நோக்கில் யாழ்நூல்"**
முனைவர் பிரமீளா குருமூர்த்தி
(பேராசிரியர், தலைவர், இந்திய இசைத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்)

இசை நடன நூற் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பவர் திரு.டி.எம்.சுவாமிநாதன் (அறங்கவலர், ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வர தேவஸ்தானம், கொழும்பு)

மாலை 6.00 மணியளவில் அணிசெய் கலைஞர்களுடனான இசை நிகழ்வு இடம்பெறும்.
பாட்டு முனைவர் பிரமீளா குருமூர்த்தி
(பேராசிரியர் & தலைவர், இந்திய இசைத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்)

நன்றியுரை : ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (பொதுச் செயலாளர், கொ.த.சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## தை மாதம் நடைபெற்ற சங்க நிகழ்வுகள்

**நூலகம் (சிறுவர் பகுதி)**

02-01-2010 "கதை கதையாம் காரியமாம்" என்ற நிகழ்வில் செல்வி கல்பனா ஜீவரட்ணம் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

**ஆரோக்கிய வாழ்வு**

03-01-2010 கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடாத்திய ஆரோக்கிய வாழ்வு கருத் தரங்கில் "முதியோரின் உடல் நலப் பிரச்சினைகள்" என்ற தலைப் பில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வைத்திய கலாநிதி சி.அனுஷ்யந்தன் அவர்களது தலைமையில் பல வைத்திய கலாநிதிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சைவப்புலவர் கலாபுஷணம் சு.செல்லத்துரை அவர்களும் கலந்து கொண்ட நிகழ்ச்சியை திரு.கா.வைத்தீஸ்வரன் தொகுத்து வழங்கினார்.

**அறிவோர் ஒன்று கூடல்**

06-01-2010 "ஒரு படைப்பாளியின் பருந்துப் பார்வை" என்னும் தலைப்பில் மட்டுவில் சோ.ஞானக்குமரன் உரையாற்றினார். இந்நிகழ்வுக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா அவர்கள் தலைமை தாங்க நல்ல பல ஆரோக்கியமான கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

**வாக்கேயக்காரர் வரிசையில்**

08-01-2010 இலங்கையில் வேறு எங்கும் நடைபெறாத அளவு சிறப்பாக, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 'வாக்கேயக்காரர் வரிசையில்' என்ற நிகழ்வு நடைபெற்று வருகின்றது. 8ஆம் திகதி இடம்பெற்ற அந்நிகழ்வுக்கு ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.டபிள்யூ.எஸ்.செந்தில்நாதன் தொடக்க வுரையாற்றினார்.

"கோபாலகிருஷ்ண பாரதி" என்னும் தலைப்பில் பண்ணிசைக் கலா வித்தகர், இசைக் கலைமாணி செல்வி.சஜீவி இராசையா அவர்கள் உரையிடைப்பட்ட பாடல்களை இனிமையாகப் பாடிச் சபையோரை மகிழ்வித்தார். தியாகராஜ சுவாமிகளுடன் சமகாலத்தில் வாழ்ந்த கோபாலகிருஷ்ண பாரதியார் பல இனிமையான பாடல்களைப்பாடி தியாகராஜ சுவாமிகளாலும் பாராட்டப் பெற்றவர் என்ற செய்தியும் அங்கு கூறப்பட்டது. தியாகராஜ சுவாமிகள் இராமபிரானைப் புகழ்ந்து பாடியது போல் கோபாலகிருஷ்ண பாரதியார் தில்லைச்சிதம்பர நடராஜரைப் போற்றிப் பல பாடல்களைப் பாடியுள்ளதாக கூறிய உரைஞர் அவற்றை இனிமையாகப் பாடியும் காட்டினார். வளர்க அவரது பணி. அணி செய் கலைஞர்களாக திருமதி சுவர்ணாங்கி சுகர்தன் (வயலின்) திரு.க.சுவாமிநாதன்சர்மா (மிருதங்கம்) ஆகியோர் பங்கு கொண்டு நிகழ்ச்சியை மேலும் மெருகூட்டினார்.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

09-01-2010 "கதை கதையாம் காரியமாம்" என்ற நிகழ்வில் செல்வி அ.வளர்மதி கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளை கூறி மகிழ்வித்தார்.



11-01-2010 திங்கட்கிழமை "மனிதம்" என்னும் தலைப்பில் ஒரு சிறப்புச் சொற் பொழிவு இடம்பெற்றது. துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.த.இராசரத்தினம் அவர் கள் வரவேற்புரை ஆற்றினார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் கணபதி பாஸ்கரன் உரையாற்றினார். சமயம், சமூகவியல் சார்ந்த நூல்களிலிருந்து "மனிதம்" பற்றிய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து சபையோர் இரசிக்கும்படி உரை யாற்றினார். அதனைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் திரு ஆழ்வாப் பிள்ளை கந்தசாமி அவர்களது நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

**அறிவோர் ஒன்று கூடல்**

13-01-2010 அன்று நடைபெற்ற அறிவோர் ஒன்று கூடலில் "தமிழக வானொலி நட்சத்திரம் தென்கச்சி சுவாமிநாதன்" என்னும் தலைப்பில் பன்னூல் ஆசிரியர் தமிழ்மணி மானா மக்கீன் அவர்களின் உரை இடம் பெற்றது. நிகழ்ச்சிக்கு ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.இ.உருக்குமணிகாந்தன் தலைமை தாங்கினார். பலவிதமான செய்திகளைக் கூறி சபையோரைக் கவரும் வண்ணம் பேச்சாளர் உரை நிகழ்த்தினார். கருத்தாடலில் பலரும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

**பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக**

14-01-2010 அன்று தமிழர் திருநாள், உழவர் பெருநாள் என்று போற்றப்படும் தைப் பொங்கல் விழா காலை 9.00 மணியளவில் தமிழ்ச் சங்கத்தில் கொண்டாடப்பட்டது. தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தலைமையில் இடம்பெற்ற பொங்கல் விழாவுக்கு ஆட்சிக்குழு உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள் காரியாலய நிர்வாக அலுவலர், ஊழியர் உட்படப் பலரும் பங்கு கொண்டனர். வந்திருந்த அனைவரும் சூரியனுக்கு நன்றி செலுத்தி, சங்கத்தில் தமிழ்ப் பொங்கலுண்டு களிப்பெய்தினர்.



மாலை நிகழ்வுகள் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பேராசிரியர் சபா ஜெயராசா அவர் கள் தலைமையில் ஆரம்பமாகியது. ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.க.சுந்தரமூர்த்தி அவர்களது வரவேற்புரையுடன் மாலை 5.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களது தலைமையுரையைத் தொடர்ந்து செல்வி திவ்யா சிவநேசனின் நெறியாள்கையில் அபிநயஷேத்திரா நாட்டியப் பள்ளி மாணவிகள் "கிராமத்துச் சாரல்" என்னும் நடன ஆற்றுகையை நயம்பட ஆற்றினர்.

இரண்டாவது நிகழ்வாக "இச்சை கொண்ட பொருளெல்லாம்..." என்னும் தலைப்பில் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் தலைமையில் "கவிஞர் அரங்கம்" நடைபெற்றது.

நிகழ்வுத் தொடர்ச்சி 6ஆம் பக்கம் பார்க்க...

# திருக்குறள் தொடர் சொற்பொழிவு சிறப்புச் செய்திகள்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் 26.12.2009 தொடக்கம் 02.01.2010 வரை நடாத்திய திருக்குறள் சொற்பொழிவு நிகழ்வு தை மாதம் 1ம், 2ம் திகதிகளிலும் பெரும் தொகையான பார்வையாளர்களுடன் சிறப்பாக நடைபெற்றது. 1ம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் திரு.ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் ஓர் அதிகாரம் பற்றி கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் உரை ஆற்றினார்கள்.

நிறைவு நாளாகிய எட்டாம் நாள் 'ஓர் உரை' என்னும் தலைப்பில் கம்பவாரிதி சொற்பொழிவு நிகழ்த்தினார். சுமார் 700 பேர் வரையில் கலந்து கொண்ட அன்றைய நிகழ்வுகளை ஆட்சிக்குழு உறுப்பினர் ப.க.மகாதேவா தொகுத்து வழங்க திரு.எஸ்.கணபதிப்பிள்ளை தம்பதிகள் மங்கள விளக்கு ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். திருமதி ரஜனி சந்திரலிங்கம் அவர்கள் தமிழ் வாழ்த்தினை இசைத்தார். தமிழ்ச் சங்க பதிப்புக்குழுச் செயலாளரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவருமான திரு.க.இரகுபரன் அவர்கள் சிறப்பான தொடக்கவுரையை ஆற்றினார். தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் உரையாற்றுகையில் தமிழ்ச் சங்க வரலாற்றில் முதன்முறையாக தொடர்ந்து 8 நாட்கள் நிகழ்ச்சி நடந்தமை, இதுவே முதல் தடவை என்று கூறினார். இச்சொற்பொழிவு ஒரு பெரிய விழாவாகவே முன்னெடுக்கப்பட்டது. இதன் வெற்றிக்கு உதவிய கம்பவாரிதி ஜெயராஜ் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் உட்பட அனைத்து ஆட்சிக்குழுவினருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

நிறைவு நாள் உரையை ஆற்றத் தொடங்கிய கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள், திருக்குறள் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு தமிழ்ச் சங்கம் தீர்மானித்து என்னை அணுகியபோது மனமுவந்து ஒப்புக் கொண்டேன். நல்ல ஒரு சபையை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல் வெற்றிகரமாக நடாத்தி முடிக்க முன்னின்று உழைத்த பொதுச் செலயலாளருக்கு நன்றி சொல்லவேண்டும் என்றார். அத்துடன் கொழும்புக் கம்பன் கழகத்தின் சார்பில் அதன் பொருளாளர் பாலேந்திரா அவர்கள் பொதுச் செயலாளர் திரு ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களுக்குப் பொன்னடை போர்த்திக் கௌரவித்தார்.


கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நித்திய பூசை போன்று அநேகமாக ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கொழும்பு கம்பன் கழகத்தில் நைமித்திய பூசை போன்று சில சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இரண்டு அமைப்புக்களும் இணைந்தோ, தனித்தோ தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பினைச் செய்யவேண்டிய பொறுப்பு எம்முன் உள்ளது. கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற திருக்குறள் சொற்பொழிவின் போது ஒவ்வொரு நாளும் அமைக்கப்பட்ட மேடை அலங்காரங்களும், பூக்களின் நிற மாற்றங்களும் எமக்குச் சவால் விடுவது போல் அமைந்திருந்தன. கொழும்புக் கம்பன் கழகத்து மேடைகளை விட ஒருபடி மேலாக இருந்தது என்றாலும் மிகையாகாது என்றார். தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு சேர நன்றி கூறி உரையினுள் நுழைந்தார்.



அவரது உரை நிறைவடைந்ததும் தொடர்சொற்பொழிவுக்கு மகுடம் வைத்தது போன்று நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. சங்கத்தின் இலச்சினை கொண்ட சங்கு, வெள்ளியால் பதிக்கப்பெற்று ''கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் திருக்குறள் தொடர்உரை 26-12-2009 - 02-01-2010, சொல் வளப் பெருக்கின் திறன் மிக வோங்கும் செவ்வியற் புலவ - நின் சீர் புகழ் வாழ்க!" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட கேடயத்தினை கல்விக்குழு செயலாளர் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்கள் அறிமுகம் செய்து தலைவரிடம் கையளித்தார்.

சபையினரின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் நிதிச் செயலாளர் பாலேஸ்வரன் கம்பவாரிதிக்கு மாலை அணிவித்ததும் தலைவர் நினைவுக் கேடயத்தினை கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களிடம் கையளித்தார். அதனைத் தொடந்து பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களால் அரிய சில நூல்கள் கம்பவாரிதி அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. பொது மக்கள் சார்பில் செயலாளருக்கு சமூக சேவகர் க.மு.தர்மராஜா அவர்களால் பொன்னடை போர்க்கப்பட்டது. கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்துக்கு என சில தமிழ் சட்டப் புத்தகங்களும் அவரால் செயலாளரிடம் கையளிக்கப்பட்டன.

பொதுச் செயலாளர் தனது நன்றியுரையில் எமது அழைப்பையேற்று இந்த தொடர் சொற்பொழிவுக்கு வருகை தந்து சிறப்பாக நிறைவு செய்து வைத்த கம்பவாரிதி அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவித்தார். எட்டு நாட்களும் மங்கள விளக்கேற்றி வைத்தவர்கள், தமிழ் வாழ்த்திசைத்தவர்கள், தொடக்கவுரை ஆற்றியவர்கள், தலைமையுரையாற்றியவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். மேலும் தொடர் சொற்பொழிவு வெற்றி பெற உதவிய ஆட்சிக்குழு உறுப்பினர்கள், காரியாலய ஊழியர்கள், மற்றும் தமிழ்ச் சங்க சகல ஊழியர்களுக்கும் நன்றி கூறியதோடு குறிப்பிட்ட நேரத்துக்கு பேச்சு ஆரம்பமாக ஒத்துழைத்த சபையோருக்கும் நன்றி கூறினார். நிறைவு நாள் நிகழ்வுகள் யாவும் இரவு 8 மணியளவில் சங்க கீதத்துடன் நிறைவு பெற்றன.



நெஞ்சை நிறைத்திடும் நினைவுக் கேடயம்



என்றும் நின்றிடும் இனிய நினைவுகள்



கருத்தைக் கவர்ந்திடும் நூல்கள் வழங்கல்



நன்றிப்பெருக்கால் பொன்னாடை போர்த்தல்

**நடைபெறவிருக்கும் நிகழ்வு**

**வாக்கேயகாரர் வரிசையில் "ஊத்துக்காடு வெங்கட சுப்பையா"**

நிகழ்வு எதிர்வரும் 26.02.2010 அன்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

**தொடக்கவுரை**
திரு.டபிள்யு.எஸ்.செந்தில்நாதன்
(ஆட்சிக்குழு உறுப்பினர், கொ.த.சங்கம்)

**இசைக்கலைமாணி**
திருமதி சொர்ணலதா பிரதாபன்

**பக்க வாத்தியங்கள்**

**வயலின்**
திரு.எஸ்.திபாகரன்

**மிருதங்கம்**
திரு.க.சுவாமிநாதன்சர்மா

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
பொதுச் செயலாளர்

3ஆம் பக்கம் நிகழ்வுத் தொடர்...

கவிஞர்கள் மட்டுவில் ஞானக்குமரன், லுணுகலை ஸ்ரீ, இரா.எழில்மொழி, ந.காண்டீபன், இரா.சடாகோபன் ஆகியோர் கவிதைகளை வழங்கினர்.

இரண்டு நிகழ்ச்சிகளும் சபையினரது பாராட்டுக்களைப் பெற்றன. இனிய பொங்கல் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.மகாதேவா அவர்கள் கூற தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் நாள் நிகழ்வுகள் புதுப்பொலிவுடன் நிறைவு பெற்றன.

**இலக்கிய களம் - நிகழ்வு 08**

15-01-2010 வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் இலக்கியக்களம் 8ஆவது நிகழ்வில் "சேர்.பொன்.அருணாசலம் நினைவுரை" மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகியது. நிகழ்ச்சிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க கல்விக் குழுச் செயலாளர் திரு.மா.கணபதிப்பிள்ளை ஒரு சிறந்த தலைமையுரையை ஆற்றினார்.

சட்டத்தரணி திரு.சி.அ.ஜோதிலிங்கம் அவர்கள் ஒரு கச்சிதமான நினைவுரையை ஆற்றி சபையோரின் பாராட்டுதல்களைப் பெற்றார். .

**நூலகம் (சிறுவர் பகுதி)**

16-01-2010 "கதை கதையாம் காரியமாம்" என்ற நிகழ்வில் செல்வி ஜயாத்துரை மனோறா கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

**அறிவோர் ஒன்று கூடல்**

20-01-2010 அன்று அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வில் "நாட்டாரியலின் மட்டக்களப்பு மாந்திரிகம்" என்னும் விடயம் பற்றி மணிப்புலவர் மருதூர் மஜீத் அவர்கள் உரையாற்றினார். நிகழ்ச்சிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினர் திரு.த.இராசரத்தினம் தலைமை தாங்கினார். உரையாற்றிய மணிப்புலவர் அவர்கள் பல விளக்கக் குறிப்புகளுடன் உரையாற்றியதோடு சிலவற்றை செயல்முறை மூலமும் விளக்கினார். சபையோரது கருத்தாடலுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

**இலக்கியக்களம் - நிகழ்வு 09**

22-01-2010 அன்று நடைபெற்ற இலக்கியக்களம் நிகழ்வில் 'நாட்டியம் வளர்த்த பெண்கள்' என்னும் தலைப்பில் நடன ஆசிரியர் திருமதி பிரகதாம்பாள் தில்லைநடராஜா அவர்கள் உரை நிகழ்த்தினார். கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திருமதி வசந்தி தயாபரன் அவர்களின் சிறப்பான தலைமையில் நல்ல உரை நிகழ்த்தப்பட்டது.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

23-01-2010 "கதை கதையாம் காரியமாம்" என்ற நிகழ்வில் செல்வி ஜயாத்துரை மனோறா கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

**நூல் வெளியீடு**

23-01-2010 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்க பதிப்புக்குழுவினரினால் வெளியிடப்படும் நூல்கள் வரிசையில் ஜெயவர்த்தன பல்கலைக்கழக



விரிவுரையாளர் திரு ஸ்ரீபிரசாந்தன் அவர்களால் எழுதப் பெற்ற **'சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை'** என்னும் நூல் வெளியிடப்பட்டது. கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் திரு.ஜி.இராஜகுலேந்திரா அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். ஆட்சிக்குழு உறுப்பினர் ப.க.மகாதேவா அவர்களது வரவேற்புரையைத் தொடர்ந்து தலைவர் தனது உரையை ஆற்றினார். பதிப்புக்குழுச் செயலாளர் திரு.க.இரகுபரன் அவர்கள் நூலை வெளியிட்டு அறிமுகம் செய்து வைத்தார். முதற்பிரதியை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவி திருமதி யமுனா கணேசலிங்கம் பெற்றுக் கொண்டார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் நூல்கள் பற்றிய கருத்துரைகளை வழங்க ஸ்ரீபிரசாந்தன் நூல் எழுதப்பட்ட நோக்கம் அதன் பயன்பாடுகள் பற்றி போதிய விளக்கங்களைக் கூற தமிழ் வாழ்த்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.



**அர்றைத் திங்கள்**

29-01-2010 மாதந்தோறும் நடைபெறும் அர்றைத் திங்கள் நிகழ்வில் பிரபல எழுத்தாளர் கவிஞர் திக்குவல்லை கமால் அவர்கள் கருத்துமிக்க பல தகவல்களைக் கொண்ட உரையை ஆற்றி சபையோரை மகிழ்வித்தார். கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமை தாங்கி நிகழ்வை மேலும் மெருகூட்டினார்.

**நினைவுப்பேருரை**

30-01-2010 அமரர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்களின் ஞாபகார்த்த நினைவுப் பேருரை இடம்பெற்றது. மாலை 5.30 மணியளவில் திருமதி சொர்ணலதா பிரதாபன் அவர்கள் தமிழ் வாழ்த்திசைத்தார். கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினார். இலங்கையிலே தமிழ்க் கல்வியும் ஆய்வும் தொடர்ச்சியும் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்கள் நினைவுப்பேருரையாற்றினார். பலரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச்சிறப்பித்தனர். பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நன்றியுரையாற்றினார்.

செய்திமடல் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்.

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
**பொதுச்செயலாளர்**

**வடிவமைப்பு: ப.க.மகாதேவா ஆட்சிக்குழு உறுப்பினர்**

கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் காட்சிப்படுத்தலும் கணனிப்படுத்தலும்

எழுத்தாளர்களே! புதிய நூல்களை வெளியிடும்போது கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்துக்கு இரண்டு பிரதிகளை அனுப்பிவையுங்கள். கொழும்புத் தமிழ்ச்சங்கம் இலங்கையிலுள்ள பெரிய நூலகங்களில் ஒன்றாகும். நீங்கள் அனுப்பும் நூல்களை **'புதிய வரவுகள்'** பகுதியில் காட்சிப்படுத்துவதோடு, ஈழத்து எழுத்தாளர்களின் நூல்க்ள் உள்ள பகுதியில் வாசகர் பாவனைக்கும் வைக்கப்படும். அத்தோடு அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நூல்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு "noolaham.com" இணையத்தின் மூலம் உலகெங்கிலும் உள்ள வாசகர்கள் உங்கள் நூல்களை அறிந்து கொள்ளவும் வாசிப்பதற்கும் வகைசெய்யப்படும். நூல்கள் எமக்குக் கிடைத்ததும் அதுபற்றி உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

**நூல்கள் அனுப்பவேண்டிய முகவரி:-**
பொதுச்செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.